இந்து தமிழ் திசை

### சிறப்பு பயிற்சி பெற்ற செவிலியர் குழுவால்

# ஜிப்மரில் இரு மடங்காக உயர்ந்தது தாய்ப்பால் தானம்

■ புதுச்சேரி

ஜிப்மரில் சிறப்பு பயிற்சி பெற்ற செவிலியர் குழுவின் முன்முயற்சியால் நாள்தோறும் கிடைக்கும் தாய்ப்பால் தானம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

ஜிப்மரில் மாதந்தோறும் சுமார் 1,000 பிரசவங்கள் நடைபெறுகின்றன. புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மிகவும் சிக்கலான மகப்பேறு சிகிச்சை தேவைப்படும் கர்ப்பிணிகள் இங்கு பரிந்துரையாக அனுப்பப்படுகின்றனர்.

அதை தொடர்ந்து பிறக்கும் பச்சிளம் குழந்தைகளுக்கென ஜிப்மரில் நவீன வசதிகளுடன் கூடிய தேசிய தரம் வாய்ந்த பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு (NICU) இயங்கி வருகிறது.

அவசர மற்றும் பேறு காலத்துக்கு முன்பாகவே பிறக்கும் குழந்தைகளுக்கான சரியான மற்றும் காலதாமதமற்ற தாய்ப்பால் ஊட்டச்சத்து வழங்குதல் மிக முக்கியமானதாக இருந்து வருகிறது.

இந்த அவசியத்தை உணர்ந்து, தாய்ப்பால் ஆலோசனை சேவைகளை வலுப்படுத்தும் பணியை ஜிப்மர் செவிலியர் துறை முன்னின்று மேற்கொண்டது. இதனடிப்படையில், இதற்கான பயிற்சி திட்டம் வடிவமைக்கப்பட்டது.

இப்பயிற்சியில் ஜிப்மரின் 35 செவிலியர்கள் தாய்ப்பால் ஆலோசனை மற்றும் குழந்தை பிறப்புக்குப் பிந்தைய பாலூட்டல் ஆலோசனை வழங்குதல் தொடர்பாக தீவிர பயிற்சி பெற்றனர்.



ஜிப்மர் 'அமுதம் தாய்ப்பால் மையம்' மூலம் தானமாக பெறப்பட்ட தாய்ப்பால் ஒரு குழந்தைக்கு ஊட்டப்படுகிறது.

தற்போது இவர்கள் ஜிப்மரின் மகளிர் மற்றும் குழந்தைகள் பிரிவின் அனைத்து உட்புற சிகிச்சை பிரிவுகளிலும் நியமிக்கப்பட்டு, 24 மணிநேர தாய்ப்பால் ஆலோசனை சேவையை வழங்கி வருகின்றனர்.

இது தாய்மார்களை தங்களது குழந்தைகளுக்கு முறையாக தாய்ப்பால் புகட்டும் நோக்கிலும், மேலும் தாய்ப்பால் தேவைப்படும் பிற குழந்தைகளுக்கு தங்களது தாய்ப்பாலை தானமாக வழங்கும் நோக்கிலும் அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தீவிரமான சேவைகள் விளைவாக, ஜிப்மரின் 'அமுதம் தாய்ப்பால் மையம்' நாள்தோறும் பெறும் தாய்ப்பாலின் தான அளவு தற்போது இரட்டிப்பாக உயர்ந்துள்ளது. இந்த அளவு வரும் காலங்களில் பலமடங்கு உயரவும் வாய்ப்புள்ளது.

இதன்மூலம் பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயுற்ற மற்றும் பேறு காலத்துக்கு முன் பிறந்த குழந்தைகளுக்கு சிறந்த ஊட்டச்சத்தாக பெரும் பயனைதரும்.

மகளிர் மற்றும் குழந்தைகள் பிரிவு செவிலியர் மேலாளர் ஜேன் மேரி ஆண்ட்ரு தலைமையிலான செவிலியர் குழு, இந்த முயற்சியை வடிவமைத்து, ஒருங்கிணைத்து, நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி கூறுகையில், "ஜிப்மரின் உட்புற சிகிச்சை அம்சத்தில் உருவான உண்மையான வெண்மைப் புரட்சி. தாய்ப்பால் குறித்த ஆலோசனைகளும் வலுப்படுத்தப்பட்ட மனித தாய்ப்பால் வங்கி சேவைகளும் ஜிப்மரில் பச்சிளம் குழந்தை பராமரிப்பு தரத்தை உயர்த்தும் மாற்றத்திற்கான முக்கியமான படியாகும்" என்றார்.

பச்சிளம் குழந்தைகள் மருத்துவத் துறை பேராசிரியரும் அமுதம் தாய்ப்பால் தலைவருமான டாக்டர் ஆதிசிவம் இத்திட்டத்தை வழிநடத்தி வருகிறார்.

அவர் கூறுகையில், "கட்டமைக்கப்பட்ட பயிற்சி, தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பல்துறை ஒத்துழைப்பு ஆகியவை இந்த திட்டத்தின் வெற்றிக்கான முக்கிய காரணி. தாய்மார்களிடையே முழுமையான தாய்ப்பால் வழங்கும் நடைமுறையை ஊக்குவிப்பதிலும், சேவைகளை மேலும் வலுப்படுத்துவதிலும் பச்சிளம் குழந்தைகள் துறை தொடர்ந்து உறுதியாக செயல்படும் " என்று தெரிவித்தார்.